**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**
**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.229/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Mohandoss | Prosecution | P.W-1 . LW-1 |
| Husband Name | Chellam | Defence | |
| Village | 42 Radha Nallur | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 58 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **30.01.2023.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். கடந்த 26.02.2020 ஆம் தேதி வயலுக்கு காலை 9 மணிக்கு தண்ணீர் பாய்ச்சிவிட்டு சாப்பிட வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு மீண்டும் வயலுக்கு சென்று பார்த்தபோது தண்ணீர் பாய்ச்சும் வாய்காலை குறுக்காக செல்லக்கண்ணு மகன் ஆசைத்தம்பி என்பவர் அடைத்துவிட்டார். தண்ணீர் பாய்ச்சுவதை எதற்காக அடைக்கிறீர்கள் என்று கேட்டு வாய்காலை திறந்தபோது ஆஜர் எதிரி என் தலையின் பின் புறத்தில் மண் வெட்டியை கொண்டு வெட்டிவிட்டார் உடனே நான் வீட்டிற்கு வந்தபோது எனது மருமகன் சரண், வைகுண்டம் ஆகிய இருவரும் சீர்காழி அரச மருத்துவமனைக்கு என்னை அழைத்து சென்றார்கள். நான் மருத்துவ சிகிச்சையில் இருந்தபோது சீர்காழி போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியும் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜராகியும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.